1970 ஏப்ரல் 6]

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள காவிரிப் பாசன ஆயக்கட்டுகள்

***699 வினா.—திரு என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், காவேரிப் பாசனத்தின் கடைமடைப் பகுதி, மண்ணியாற்றின் தலைப்பு மண் அடித்து தூர்ந்து போய் விட்டதால் அதற்கு கொள்ளிடம், குமுக்கி மண்ணியாற்றிலிருந்து தற்காலிகமாக தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதை நிரந்தரமாக்கக் கோரி விவசாயிகளிடமிருந்து கோரிக்கை ஏதேனும் அண்மையில் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துள்ள முடிவென்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) ஆம். 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் முறையீடு ஒன்று வரப்பெற்றது.

(இ) மண்ணியாற்றின் தலைப்பகுதியை மேம்பாடுசெய்து அதன் ஆயக்கட்டிற்குத் தண்ணீர் போதிய அளவு கிடைக்க வகை செய்வதற்கான செயற்குறிப்புகள் உள்ளன. மண்ணியாற்றின் தலைப்பகுதியை மேம் பாடு செய்து அதனால் ஏற்படக்கூடிய பலன்களைச் சிலகாலம் கவனித்த பின்னரே, மண்ணியாற்றுக்கு நீர் வழங்கும் வாயிலை மாற்றுவது குறித்து அதாவது குமுக்கி மண்ணியாறு கலக்குமிடத்திற்குக் கீழே மண்ணியாற்றின் கீழ் கடைமடைப்பகுதியில் உள்ள 3,738 ஏக்கர் ஆயக்கட்டுக்கு தற்போது தற்காலிக ஏற்பாடாக குமுக்கி மண்ணியாற்றி லிருந்து நீர் வழங்கப்பட்டு வருவதை நிலையான ஏற்பாடாக்குவது குறித்து ஆலோசிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மண்ணியாற்றின் தலைப்பு பெரும்பாலும் தூர்ந்துவிட்ட காரணத்தினால், மண்ணியாற்றில் கடை மடைப் பகுதிக்குத் தேவையான தண்ணீர் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. எனவே, குமுக்கி மண்ணியாறு மூலம் கொள்ளிடத்தில் மண்ணியாற்றின் கடைமடைப்பகுதிக்குத் தண்ணீர் விட ஒரு நிரந்தரமான உத்தரவை அரசு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: ஏற்கெனவே நான் அளித்த பதிலில் இந்த விவரங்கள் அடங்கியிருக்கின்றன.

திருமயம் தொகுதியிலுள்ள விராச்சிலைக் கண்மாய்க்குக் கால்வாய் அமைப்பு

***700 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

திருமயம் தொகுதியிலுள்ள வாழக்குறிச்சி நெய்வேலிக் கண்மாய் களின் கலிங்கல் நீர் வந்து விழும் கூடலூர் ஆற்றிலிருந்து தேவங்குழி, கண்ணேரிக் கண்மாய், ஆலங்குடிக் கண்மாய் வழியாக விராச்சிலைக் கண்மாய்க்குக் கால்வாய் வெட்டிப் பாசனத்தைப் பெருக்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா: இல்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள கண்மாய்கள், கலிங்கல் அமைப்பு சங்கிலித் தொடர் போன்று அமைந்திருப்பதன் காரணமாக, அந்தப் பகுதியில் கூடலாறு என்று அழைக்கப்படும் நெரிஞ்சிக்குடி ஆற்றையும், பாம்பாற்றையும் இணைக்கக்கூடிய கால்வாய் ஒன்று அமைக்கப்பட்டால் நிறைய கண்மாய் ஆயக்கட்டுகள் பயன் பெறும். ஆகவே, அரசாங்கத்தின் சார்பில் இது பரிசீலனை செய்யப்பட்டு மேற் கொள்ளப்படுமா என்று அறிய விழைகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS